# அக்டோபர் – 02 – திங்கள்

## தூய காவல் தூதர்கள்

### “திக்கற்றவர்களின் வேண்டுதலுக்கு அவர் செவி கொடுப்பார்”– தி.பா 102 : 17

## முதல் வாசகம் : செக்கரியா 8 : 1 – 8

படைகளின் ஆண்டவரது வாக்கு மீண்டும் எனக்கு அருளப்பட்டது் படைகளின் ஆண்டவர் கூறுவது இதுவே : ”சீயோன்மீதுள்ள அன்பு வெறியால் நான் கனன்று கொண்டி ருக்கின்றேன் அதன் மீதுள்ள அன்புவெறியால் நான் சினமுற்றிரு க்கின்றேன். ”ஆண்டவர் கூறுவது இதுவே சீயோனுக்கு நான் திரும்பி வரப்போகிறேன் எருசலேம் நடுவில் குடியிருக்கப் போகிறேன் எருசலேம் “உண்மையுள்ள நகர்“ என்றும், படைகளின் ஆண்டவரது மலை “திருமலை“ என்றும் பெயர்பெற்று விளங்கும். படைகளின் ஆண்டவர் கூறுவது இதுவே் எருசலேமின் தெருக்களில் கிழவரும் கிழவியரும் மீண்டும் அமர்ந்திருப்பார்கள் வயது முதிர்ந்தவர்களானதால் ஒவ்வொருவரும் தம் கையில் கோல் வைத்திருப்பார்கள். நகரின் தெருக்களில் சிறுவரும் சிறுமியரும் நிறைந்திருப்பார்கள் அவர்கள் அதன் தெருக்களில் விளையாடிக்கொண்டிருப்பார்கள்.” படைகளின் ஆண்டவர் கூறுவது இதுவே ”இம்மக்களில் எஞ்சியிருப்போரின் கண்களுக்கு இவையெல்லாம் அந்நாள்களில் விந்தையாய்த் தோன்றினாலும், என் கண்களுக்கு விந்தையாய்த் தோன்றுமோ?” என்கிறார் படைகளின் ஆண்டவர். படைகளின் ஆண்டவர் கூறுவது இதுவே் ”இதோ, கீழ்த்திசை நாட்டினின்றும் மேற்றிசை நாட்டினின்றும் என் மக்களை விடுவிப்பேன் அவர்களை அழைத்துக் கொண்டு வருவேன் அவர்கள் எருசலேமில் குடியிருப்பார்கள் அவர்கள் என் மக்களாயிருப்பார்கள் உண்மையிலும் நீதியிலும் நான் அவர்களுக்குக் கடவுளாய் இருப்பேன்”

**பதில்பாடல் :** ஆண்டவர் சீயோனைக் கட்டியெழுப்பி
மாட்சியுடன் திகழ்ந்திடுவார்

## நற்செய்தி : மத்தேயு 18 : 1-5, 10

அக்காலத்தில் சீடர்கள் இயேசுவை அணுகி, ”விண்ணரசில் மிகப் பெரியவர் யார்?” என்று கேட்டார்கள். அவர் ஒரு சிறு பிள்ளையை அழைத்து அவர்கள் நடுவில் நிறுத்தி, பின்வருமாறு கூறினார்” நீங்கள் மனந்திரும்பிச் சிறு பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இந்தச் சிறு பிள்ளையைப்போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர். இத்தகைய சிறு பிள்ளை ஒன்றை என் பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார். ”இச்சிறியோருள் ஒருவரையும் நீங்கள் இழிவாகக் கருதவேண்டாம் கவனமாயிருங்கள்! இவர்களுடைய வானதூதர்கள் என் விண்ணகத் தந்தையின் திருமுன் எப்பொழுதும் இருக்கின்றார்கள் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

**தியானம்:** எமக்குப் பாதுகாவலாக இருக்கின்ற காவல் தூதர்களுக்கு அன்னையாம் திருச்சபை விழா எடுக்கின்றாள். சிறு வயது முதல் காவல் தூதர்கள் எமக்கு பாதுகாவலாக இருக்கின்றார்கள் என்பது எமது நம்பிக்கை. இதனையே இறைமகன் இயேசுவும் “இவர்களது வானதூதர்கள் என் விண்ணகத் தந்தையின் திருமுன் எப்பொழுதும் இருக்கின்றார்கள்” (மத்தேயு 18:10) என்கின்றார். விண்ணரசில் சிறுவர்கள் முதலாந்தரப் பிரஜைகள் என நற்செய்தி (மத்தேயு 18:4) கூறுகின்றது. எனினும், நாம் விண்ணரசை அடைய இறைமகன் இயேசு எம்மை சிறுவர்களாக வாழ அழைக்கவில்லை. மாறாக, சிறுவர்களுக்குரிய உள்ளம் கொண்டவர்களாக மாற அழைக்கின்றார். ஏனெனில் கள்ளம் கபடமற்ற குழந்தைகள் தீமையை அறியாதவர்கள். எதனையும் எளிதில் நம்பிவிடுவார்கள். அதனாலேயே விண்ணரசைக் குறித்து இறைமகன் இயேசு சிறுவர்களை முன்னுதாரணமாகக் குறிப்பிடுகின்றார். சிறுபிள்ளையானது பெரியவர்கள் சொல்வதனை கவனமாகக் காதுகொடுத்துக் கேட்கும். ஆதலால், சிறுவயதில் எமக்கிருந்த இறை நம்பிக்கை பெரியவர்களானதும் ஏன் வெகுதூரம் போய்விட்டது என சிந்திக்க இன்றைய நற்செய்தி எம்மை அழைக்கின்றது. அது மட்டுமல்ல, நாம் மனந்திரும்பி சிறுபிள்ளைகள் போல் மாறாவிட்டால் விண்ணரசில் நுழைய முடியாது எனப்படும் எச்சரிக்கையையும் நற்செய்தி (மத்தேயு 18:3) எமக்கு விடுத்திருந்தும் நாம் என்ன செய்கிறோம்?. நமது சுய இலாபத்திற்காக மற்றவர்களை கீழ்மைப்படுத்தும் தவறான செயல்களில் எதற்காக ஈடுபடுகிறோம்? சிறுகுழந்தை மனப்பான்மையோடு எல்லாம் வல்ல இறைவனே அனைத்துமென வாழ்ந்த எத்தனையோ புனிதர்களை முன்னுதாரனமாகக் கொள்வோம். தமது காவல் தூதர்களால் வழிநடத்தப்பட்ட புனிதர்களால் முடியுமாயின் எம்மால் ஏன் முடியாது?. சிறுபிள்ளைகள் போன்று நாமும் மாற்றமடைவோம். விண்ணரசை நாடும் காரியங்களுக்கு முதல் இடமளிப்போம். எல்லாம் வல்லவர் அனைத்தையும் இலேசாக செய்து முடிப்பார் என்ற நம்பிக்கையோடு வாழ்வோம்.